# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN DECEMBER - 2010

## ECS 2.11 – INTERMEDIATE MICROECONOMICS

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ. எல்லைப் பயன்பாட்டு ஆய்வு முறையைப் பயன்படுத்தி ஒரு பொருளுக்கான கேள்விக் கோட்டைப் பெறுக

(08 புள்ளிகள்)

ஆ. பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி பின்வரும் எண்ணக்கருக் களைச் சுருக்கமாக விளக்குக

- விலை நுகர்ச்சிச் கோடு
- வருமான நுகர்ச்சிக் கோடு
- எல்லைப் பதிலீட்டு விகிதம்
- சமபயன் ஆய்வில் நுகர்வோர் சமநிலை

(12 புள்ளிகள்)

02. அ. ஒரு நிறுவனத்தின் மொத்தச் செலவு, மொத்த வருமானம் என்பவை முறையே பின்வருமாறு தரப்படுகின்றன: $TC = Q^3 - 6Q^2 + 140Q + 750$ $TR = 1400Q - 7.5Q^2$ . பின்வருவனவற்றைக் கணிப்பீடு செய்க

- சராசரிச் செலவுத் தொழிற்பாடு
- எல்லைச் செலவுத் தொழிற்பாடு
- எல்லை வருமானத் தொழிற்பாடு
- நிறுவனத்தின் சமநிலை
- உத்தம இலாபம்

(05 புள்ளிகள்)

ஆ. பின்வரும் உற்பத்திச் செலவுகளை விளக்குக

- கணக்கீட்டுச் செலவு
- வாய்ப்புச் செலவு
- பொருளாதாரச் செலவு
- சமூகச் செலவு
- நிலையான செலவு

(15 புள்ளிகள்)

03. அ. உற்பத்தி அளவுத்திட்டங்கள் என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? சமவிளைவுக் கோடுகளைப் பயன்படுத்தி பல்வேறு உற்பத்தி அளவுத்திட்டங்களை விளக்குக

(08 புள்ளிகள்)

ஆ. பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை விளக்குக

வரம்புக் கோடுகள்

எல்லைத் தொழில் நுட்பப் பதிலீட்டு விகிதம்

சமநிலை வெளியீட்டு மட்டம்

(12 புள்ளிகள்)

04. அ. "ஒரு நிறைபோட்டி நிறுவனம் நீண்ட காலத்தில் சாதாரண இலாபத்தை மாத்திரமே உழைக்கின்றது." உமது விடையை நிரூபிக்குக

(06 புள்ளிகள்)

ஆ. ஒரு தனியுரிமைச் சந்தையின் சராசரி வருமானக் கோட்டை எவ்வாறு பெற்றுக் கொள்வீர் எனக் காட்டுக

(06 புள்ளிகள்)

இ. 'ஒரு தனியுரிமை நிறுவனம் குறுங்காலத்தில் கட்டாயமாக மிகைலாபத்தையே உழைக்கும்'. உமது விடையைச் சுருக்கமாக விளக்குக

(08 புள்ளிகள்)

05. அ. எவ்வாறான சந்தர்ப்பங்களில் விலை பேதப்படுத்தல் சாத்தியமாகும்? விபரிக்குக

(08 புள்ளிகள்)

ஆ. பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலை விலை பேதப்படுத்தல்களை வேறுபடுத்துக

(12 புள்ளிகள்)

06. அ தனியுரிமைப் போட்டிச் சந்தையின் பண்புகளை வெளிக்கொணர்க

(06 புள்ளிகள்)

ஆ. தனியுரிமைப் போட்டிச்சந்தையில் விளம்பரத்தின் பங்கினை விளக்குக

(06 புள்ளிகள்)

இ. சாம்பர்லின் என்பவரின் தனியுரிமைப் போட்டி மாதிரிபற்றி சிறு குறிப்புத் தருக

(08 புள்ளிகள்)

07. அ. சிலருரிமைப் போட்டிச்சந்தை என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

ஆ. சிலருரிமைச் சந்தையில் விலை உறுதிப்பாட்டுக்கான கோட்பாட்டு ரீதியான நியாயத்தை உடைந்த கேள்விக் கோட்டு ஆய்வு முறை எவ்வாறு வழங்குகின்றது எனக் காட்டுக

(15 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்பெழுதுக

அ. வருமான விளைவும் பதிலீட்டு விளைவும்

ஆ. குறுங்கால சராசரிச் செலவுக்கோடும், நீண்டகால சராசரிச் செலவுக்கோடும்

இ. சமபயன் கோடுகளின் பண்புகள்

ஈ. ஊழியத்தின் எல்லை வருமான உற்பத்தி

(20 புள்ளிகள்)

***